IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.66/2025

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | RAJASEKAR |
| FATHER'S NAME | : | BALAKRISHNAN |
| VILLAGE | : | SEDHUVALAI |
| OCCUPATION | : | SALOON SHOP |
| AGE | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது செதுவாலையில் வசித்து வருகிறேன். சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலுத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம்என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொாப்பம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் முன்பாக போலிசார் யாரையும் விசாரணை செய்யவில்லை. எந்த சொத்தையும் பறிமுதல் செய்யவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 12.08.2023 ம் தேதி 2 மணியளவில் நானும் கிருஷ்ணன் என்பவரும் நின்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது காட்பாடி காவல் நிலையத்தால் திருட்டு வழக்கு சம்மந்தமாக எதிரி சுதாகர் என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், அதில் நானும் இளங்கோ என்பவரும் சாட்சியமாக கையொப்பம் செய்தோம் என்றும், எதிரியளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அடகு வைத்திருந்த 24 கிராம் உருக்கப்பட்ட தங்க கட்டியை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நானும் இளங்கோ என்பவரும் சாட்சியமாக கையொப்பம்செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை :**

இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.66/2025

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | ELANGO |
| FATHER'S NAME | : | ANNAMALAI |
| VILLAGE | : | SEDHUVALAI |
| OCCUPATION | : | PUMP OPERATOR |
| AGE | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது செதுவாலையில் வசித்து வருகிறேன். செதுவாலை பஞ்சாயத்தில் நீரேற்றும் பம்ப் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலுத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொாப்பம் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கையொப்பத்தை ஏரோட்ராம் மோட்டுர் அருகே வைத்து செய்து கொடுத்தேன். என்ன வழக்கு என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 12.08.2023 ம் தேதி 2 மணியளவில் நானும் எனது நண்பர்

ராஜசேகரும் என்பவரும் நின்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது காட்பாடி காவல் நிலையத்தால் திருட்டு வழக்கு சம்மந்தமாக எதிரி சுதாகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், அதில் நானும் ராஜசேகரும் என்பவரும் சாட்சியமாக கையொப்பம் செய்தோம் என்றும், எதிரியளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அடகு வைத்திருந்த 24 கிராம் உருக்கப்பட்ட தங்க கட்டியை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நானும் ராஜசேகரும் என்பவரும் சாட்சியமாக கையொப்பம் செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,

காட்பாடி.